தமிழர்களுக்கான வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதோடு, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, உங்கள் கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துவிட்டது. போதும், Please. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கருத்தை நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் Plumber முதல் கடைநிலை பணி வரைக்கும் இந்தியில் தான் தேர்வு எழுத வேண்டும் என்றுள்ளது. இந்தியில் தான் நேர்காணல் நடக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, அரசின் கவனத்தை ஈர்த்து விட்டீர்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள்.

(ஈ) செங்கல் சூளை மற்றும் மண்பாண்டம் செய்பவர்களுக்கு மணல் எடுக்க அனுமதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம், ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஓர் உத்தரவினைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, செங்கல் சூளை மற்றும் மண்பாண்ட சூளைகளுக்கு மணல் எடுக்க அனுமதி தருவதாக நேற்றையதினம் சொன்னீர்கள். அதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் இதற்குப் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரத்திற்கு மறதியா? அன்றைக்கு நான் clean ஆக பதில் சொல்லியிருக்கிறேன்.

(குறுக்கீடு) No. No. நான் சொல்வதைக் கேளுங்கள். எல்லா சரக்கையும் கொடுத்து—எல்லாவற்றையும் செய்தாகிவிட்டது. Collector-களுக்கு instructions கொடுத்துவிட்டோம். யார் வேண்டுமானாலும் போய் வாங்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். எங்கேயாவது ஓர் இடத்தில் வழங்கவில்லை என்றால் சொல்லுங்கள், நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம், போதும். உட்காருங்கள்.*

(உ) நூல் விலை ஏற்றம், விசைத்தறி மற்றும் பின்னலாடைத் தொழிலாளர்கள், வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி, ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மண்டலம் முழுவதும் நூல் விலை ஏற்றத்தின் காரணமாக விசைத்தறிகள்* strike-*ல் இருக்கின்றன. பின்னலாடை தொழிலைச் சார்ந்தோரும், இரண்டு நாட்கள் அதாவது, மே 16 மற்றும் 17 ஆகிய நாட்களில்* strike *என்று அறிவித்திருக்கின்றார்கள். இறக்குமதி வரியைக் குறைத்த பின்னரும் நூல் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆகவே, இந்த ஒரு வார காலமாக அங்கு பதற்றமான சூழ்நிலை இருக்கின்றது. நூல் விலையைக் குறைப்பதற்கு* Commodities-*ஐ* Online *வர்த்தகத்திலிருந்து எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒன்றிய அரசு* Essential Commodities-*லிருந்து நீக்கியிருக்கிறது.* Stock-*ஐ* unlimit *செய்திருக்கிறது. ஒன்றிய அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக அவர்கள்* strike *செய்கிறார்கள். இது* State Government-*ன் சமாச்சாரம் இல்லை. நீங்கள், உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி, அன்றைக்கு நான் உங்களுக்கு 12 நிமிடங்கள் பேச வாய்ப்பு கொடுத்து, நீங்கள் பேசிவிட்டீர்கள். போதும், உட்காருங்கள்.* Please. *போதும், உங்களது கருத்தைப் பதிவு செய்தாகிவிட்டது. உட்காருங்கள்.*

(ஊ) மேட்டுப்பாளையம், புறவழிச்சாலை அமைத்தல் மற்றும் சிறுமுகை, லிங்காபுரம் பகுதி, காந்தவியலில் உயர்மட்டப் பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ் அவர்கள்.*